# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; 'பா.ஜ.க.வின் பிராஞ்ச்தான் த.வெ.க.' என்பதுபோல ஜோசப் விஜய் பேசியிருக்கிறாரே கேட்டியா?

**பட்டணம் :** **ஆமாமய்யா; பேசும்போதே கேட்டேன். இப்பதான் புரியுது. பா.ஜ.க.ன்னு சொன்னாலே, த.வெ.க. பம்மி பதுங்குவது ஏன்னு? இதைத்தான் பெரியார் அய்யா, சொல்லுவார், 'பூனைக்குட்டி வெளியே வந்து விட்டதுன்னு'.!**

# சிவ சிவா!

**முரட்டு பக்தர் சேகர்பாபு**
**அறநிலையத்துறை அமைச்சராக**
**இருந்தபோது**
**ஆலயச் சொத்துக்களை பாதுகாத்தார்**
**முருகன் மாநாடு வள்ளலார் மாநாடு**
**என மாநாடுகள் கூட்டினார்.**

**குடமுழுக்கு வைபவங்களை மிகச்**
**சிறப்பாக நடத்தினார்**

**ஆனால்**

**முறுக்கு பக்தர் ரமேஷின்**
**நிர்வாகத்திலோ ஆங்காங்கே ஆலயச்**
**சொத்துக்களை**
**ஆட்டயப் போடுவது அன்றாடக்**
**கதையாகி வருகிறது.**

**மேலும்...**

**குடமுழுக்கு நிகழ்ச்சிகளில் பிளாக்**
**டிக்கெட் விற்பது பைப்படி**
**தண்ணீரை பிடித்து பக்தர்கள்**
**தலையில் தெளிப்பது**

**செருப்பு காலோடு கோபுரம் ஏறுவது**
**என**



**கோவில்களை கொண்டு போய்**
**கோலி விளையாடும் பையனிடம்**
**கொடுத்த கதையாகி வருகிறது..**


**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித்*
*தொடர்புக் குழு*
*துணைத் தலைவர்*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கே.கே.எஸ்.வாசன்**
**அக்டோபர் 3 (2013)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**கும்பகோணம் நகரத்தில் வார்டு கிளைச் செயலாளர், நகர அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

**குடந்தை நகர வீடு கட்டும் சங்கத்தில் துணைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# எட்டேகால் லட்சணமே! எமனேறும் பரியே! ஆரையடா, சொன்னாயடா?

இடைத்தேர்தல் இரண்டு நடைபெற உள்ள தால், தமிழ்நாடு மண்ணுருகும் புரட்டாசியிலும், பொன்னுருகக் காய்ந்து பெரும் அனல், வெப்பக் காற்று சுழன்றெழுந்து, சூரியக் கதிர்கள் எதிரி களை சுட்டெரிப்பதுபோல வாட்டி, வதைக்கிறது.

பேராசை, பதவி அரிப்பு இவை மேலோங்கிய தால், அரசியல் கேலிக்கூத்து அரங்கேறி, ஆயா ராம், காயாராம் களுக்கு அணுவளவும் குறையா தவர்கள் நாங்கள் என அ.தி.மு.க.வின் அடையாளமாக வெற்றி பெற்றவர்கள், வாக்க ளித்த மக்களின் ஜனநாயக கடமையை மனசாட் சியை குழிதோண்டி புதைத்து, தமிழர்கள் நன்றி மறவாதவர்கள் குறிப்பாக பெண்கள் என்ற இலக் கணத்தை பிழைத்து, ஆளுங்கட்சியில் ஐயக்கிய மாகி விட்டதால், இன்று மதுராந்தகம், தாராபுரத் தில் இடைத்தேர்தல்.

**வாக்களித்த மக்களுக்கு வாய்க்கரிசி!**

அட்டைக்கத்திகளுக்கும், வாடகை வாய்களுக் கும், களவாணி கூட்டத்திற்கும், கள்ள பிராண்ட் பிராடுகளுக்கும் மென்றுதின்ன அவல்.

பிணற்றின் ஒட்டிய காசையும் கடந்து, வாயில் வைத்த வெற்றிலையை எடுத்துக் குதப்பும் அசிங் கப்பிறவிகள் அரசியல் நாகரிகம் கடந்து, வயிற் றால் பின்புறம் வெளியேறு வதை வாயால் கக் கும் வளர்ந்து கெட்ட பிறவி நேற்று தேர்தல் பரப்புரை எனும் பெயரில் தனது அரசின் சாத னையென்று எதையும் சொல்லாமல்,

திராவிட இயக்கங்களின் நாளைய நம் பிக்கை, தென்னவர் ஏற்றிப் போற்றும் சின்னவர் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் உதயநிதி அவர்களை, ஆண்ட காலத்தில் அடித்தட்டு மக்க ளின் தேவை யறிந்து திட்டம் தீட்டிய திராவிடப் பேரரசர் தளபதி யவர்களை, எல்லா வற்றையும் விட, மறைந்தும் மறையாமல், நமது சிந்தையணு ஒவ்வொன்றிலும் நிறைந்து விட்ட, நிலைத்துவிட்ட உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் இழிவாகப் பேசி, தலைவர் தள பதி, தலைவர் கலைஞர் இவர்கள் வந்தாலும் மது ராந்தகத்தில் தி.மு.க. வெற்றி பெறாது எனும் வெற் றுக்கூச்சல் போட்டி ருக்கிறான்.

அந்நாளில் வடக்கே தோல் வலிவோடு திகழ்ந்த புஜபல பராக்கிரமன் ஹர்ஷவர்த்தன ரைத் தோற்கடித்த சாளுக்கியப் பெருவேந்தன் இரண்டாம் புலிகேசியை வெற்றி கண்டு, வாதாபி யைத் தீக்கிரையாக்கியது நரசிம்ம பல்லவனின் தளபதி பரஞ்சோதியே (பின்னாளில் சிறுதொண்ட நாயனார்) அன்றி மாமன்னன் நரசிம்ம பல்ல வன் அல்ல என்பதை இந்த 24ம் புலிகேசிகள் அறிந்திருக்க நியாயமில்லை.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வெறா றியை தலைவர் தளபதியவர்களுக்கு காணிக் கையாக்கியவர் தனது பெரும் உழைப்பால், அன் றைய துணை முதல்வர் உதயநிதியவர்களே!

கடல் கடந்து வாழும் தமிழர்களின் உயிர், உடல் உதிரத்தில் ஊறிப்போன சின்னவர் உதய நிதியை மதுராந்த கத்தின் எல்லையைக் கடக்க முடியாது என்கிறது சென்ற ஆண்டு கரூர் படுகொ லையில் ஓடிப்போய் ஒளிந்த தொடைநடுங்கி தற் குறி.

உலக வரலாற்றில், தேர்தல் ஜனநாயகத்தில் போட்டியிட்ட 13 சட்டமன்றத் தேர்தல்களிலும் தோல்விக்கு, தோல்வி தந்த வெற்றித்திருமகன் தலைவர் கலைஞர் அவர்களின் தியாக வரலாறு, தேர்தல் வரலாறு அறியாமல் ஆணவத்தின் உச் சத்தை மிச்சமில்லாமல் கக்கிவிட்டுப் போயிருக்கி றான்.

தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலில் போட்டியிட்ட குளித்தலை தொகுதியில் பதிவான வாக்குகளில் தண்ணீர் குளம் எனும் வாக்குச்சா வடியில் பதிவான 167 வாக்குகளில் ஒரு ஓட்டைக் கூட அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் பெறவில்லை என்பது தலைவர் கலைஞர் அவர்களின் தேர்தல் சரித்திரத்தின் முதல் பக்கம்.



*வழக்கறிஞர்*
**வெ.அன்புவாணன்**
*கழக கொள்கை பரப்பு*
*துணைச் செயலாளர்*

திருச்சி மாவட்டம் குளித்தலையில் வெற்றி பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்னை தஞ்சை மாவட்டத்தில் எதிர்த்து நின்று வெற்றி கொள்ள முடியுமா? என அறைகூவல் விடுத்த மிகப்பெரும் செல்வந்தர், அந்நாளைய காங்கிரஸாரின் கஜானா பரிசுத்த நாடாரை 1962 ல் தந்தை பெரியார் அவர்களின் பெரும் எதிர்ப்பை யும் மீறி தோல்வியடைய வைத்த வெற்றிவீரர் தலைவர் கலைஞர் என்பதைத் தெரிந்து கொள் ளாமல்,

1989 சட்டமன்றத் தேர்தலில் தான் போட்டி யிட்ட துறைமுகம் தொகுதியில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் டெபா சிட் இழந்தார்கள் என்ற வரலாற்றைப் படைத்த தேர்தல் பெரு வேந்தர் தலைவர் கலைஞர் அவர் களின் பெருமையறியாமல்,

அதே தேர்தலில் சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் பதிவான வாக்குகள் கிண்டி அண்ணா பல்கலைக் கழகத்தில் எண்ணப்பட்ட நிலையில் ஒரு வாக்குச்சீட்டில் "தமிழ்நாட்டில் கலைஞரை விட்டால், ஆளில்லை!" என செல் லாத வாக்கானாலும், அது சொல்லாமல் உணர்த் திய உண்மையின் அடர்த்தியை உணர அறி வாற்று, பேசியும், ஏசியும், பிதற்றிய அறிவிலி களுக்குச் சொல்வோம்.

**தலைவர் கலைஞர் அவர்களின் பேனா மை உருவாக்கிய பிரதமர்களின் கணக்கு தெரியுமா?**

குடியரசுத்தலைவர், பிரதமர் பொறுப்புகள் தன்னை தேடிவந்த நேரங்களில் தமிழர் நல னொன்றே, நல்வாழ்வொன்றே தனது லட்சியம் என மனதிற்கொண்டு, "எனது உயரம் எனக்குத் தெரியும்!" என லாவகமாக மறுத்த அரசியல் வித் தகர் தலைவர் கலைஞர்.

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பின ராக 36 களின் வாக்கு அவசியம் எனும் நிலை யில் 22 வாக்குகளுடன் இன்றையக் கழகப் பொரு ளாளர், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாவட்டச் செயலாளர் டி.ஆர்.பாலுவையும், 15 ஆண்டுகளின் பின்னே அதேயளவு குறைந்த 23 வாக்குகளில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி அவர்களையும் வெற்றி பெற வைத்த அசாத்திய திறமை, அதிசயமிக்க இரா ஜதந்திரம் மிகுந்த தலைவர் கலைஞர் அவர்க ளின் வழிவந்த தளபதியவர்களை, உதயநிதியவர்களை ஏளனமாகப் இழிபிறவி களின் பேச்சைக்கேட்டால், இரத்தம் கொதிக்கி றது, எரிச்சல் எழுகிறது.

திட்டித்தீர்க்க தேடிப் பார்த்தேன் வார்த்தை களை, திராவிடப் பேரரசர் தளபதியவர்கள் கண்முன் வந்து, நாகரிக அரசியல் என்று நினை வூட்டிக் கற்பனைக்கு கடிவாளம் இருக்கிறார்.

இருக்கவே இருக்கிறது, என்றோ உரைத்த அவ்வை மூதாட்டியின் சிலேடைத்தமிழ்.

ஆமாம்.

**கூரையில்லா வீடே!**
**குலராமன் தூதுவனே!**
**எட்டே கால் லட்சணமே!**
**எமனேறும் பரியே!**
**மட்டில் பெரியம்மை வாகனமே!**
**ஆரையடா,**
**சொன்னாயடா??**
**இப்"போதைக்கு " இது போதும்.**

### தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளரை ஆதரித்து

# காளிபாளையம் ஊராட்சியில் பி.எச்.பி.மனோஜ்பாண்டியன் எம்.எல்.ஏ. தெருமுனைப் பிரச்சாரம்!

## தென்காசி தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஏற்பாடு!

*தாராபுரம், அக். 4-*

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளராகப் போட் டியிடும் வழக்கறிஞர் சுகன்யா அவர்களை ஆத ரித்து தென்காசி தெற்கு மாவட்ட கழக பொறுப்பா ளர் வே.ஜெயபாலன் ஏற் பாட்டில் காளிபாளையம் ஊராட்சியில் தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது.

இந்தப் பிரச்சாரத்தை ஆலங்குளம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் வழக்கறி ஞர் பி.எச்.பி.மனோஜ்பாண் டியன் துவக்கி வைத்து வீடு வீடாகச் சென்று உதயசூரி யன் சின்னத்தில் வாக்களிக்கு மாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.



ஒவ்வொரு வீடுகளிலும் உதயசூரியன் சின்னம் பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர் ஒட்டியும், துண்டுப் பிரசுரங் களை வழங்கியும் வாக்காளர் களிடம் வாக்குகள் சேகரித் தார்.

இந்த கிராமத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் தங் கள் வாக்குகளை உதயசூரி யன் சின்னத்திற்குத் தான் அளிப்போம் என்று வாக்கு சேகரித்த கழக நிர்வாகிகளிடம் ஆர்வமுடன் கூறினார்கள். கழகத் தலை வர் அவர்களது ஆட்சியில் நிறைவேற்றப் பெற்ற திட் டங்களால் தான் தங்கள் வாழ்க்கை மிகச் சிறப்பாக இருந்தது என்பதை அவர்கள் நெகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறினார்கள்

இந்த நிகழ்ச்சியில் தென் காசி தொகுதி கழக சட்ட மன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன், முன்னாள் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும், கழக வர்த்த கர் அணி துணை செயலாள ருமான முத்து செல்வி, கழக ஒன்றிய செயலாளர்கள் செல் லத்துரை, சிவன் பாண்டி யன், சிவகுமார், சமுத்திர பாண்டியன், மணிகண்ட னின் ஆலங்குளம் பேரூர் கழ கச் செயலாளர் நெல்சன், முக் கூடல் பேரூர் கழக செயலாளர் ஆர்.லட்சும ணன், விருதுநகர் மாவட்ட மாணவரணி முன்னாள் துணை அமைப்பாளர் எஸ். எஸ்.கதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கோலார் தங்கவயல் தி.மு.க. சார்பில் கழக முப்பெரும் விழா!

## இராமசாமி - போர்முரசு கதிரவன் - திருமதி மலர்வேணி பங்கேற்பு!

*கோலார், அக். 4 -*

கோலார் தங்க வயல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கழக முப்பெரும் விழா ஹென்றீஸ் பகுதியில் இன்று 04.10.2026 - ஞாயிற்றுக்கிழமை, காலை 10:30 மணியள வில், கோலார் தங்க வய லில் நடைபெற உள்ளது.

பொதுச்செயலாளர், கர்நாடக மாநில தொ. மு.ச., மேனாள் மாநில அமைப்பாளர் - தற்போ தைய பொறுப்புக் குழு உறுப்பினர் இராமசாமி.

செயலாளர், கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி 'போர் முரசு' கதிர வன்.

செயலாளர், கர்நாடக மாநில தொ.மு.ச. மக ளிர் அணி திருமதி மலர் வேணி.

கழகத் தோழர்கள் அருணாசலம், சாரங்க பாணி, முனிரத்தினம், வழக்கறிஞர் மணிவண் ணன், தொ.மு.ச. தலை வர் சிவா, செயலாளர் கன்னையன், நித்தியானந் தன், நாராயணமூர்த்தி, ரவீந்திரன் சௌந்தர்ரா ஜன், ஆர்மி செல்வராஜ், ஜெயசூரியன் மற்றும் கழகத்தின் முன்னணிப் பொறுப்பாளர்கள் பங் கேற்கிறார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடு ஹென்றீஸ் கிளைக் கழ கம்.

நிகழ்ச்சி சிறப்புகள்:

கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்குப் பொன்னாடை போர்த் திச் சிறப்பித்தல்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முன்னாள் மு த ல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்க ளால் 1984ஆம் ஆண்டு கழகக் கொடியேற்றி வைக்கப்பட்ட வரலாற் றுச் சிறப்புமிக்க கொடிக் கம்பத்தைப் புதுப்பிக்க அரும்பாடுபட்ட உடன் பிறப்புகளுக்கு பாராட் டும் பொன்னாடை போர்த்துதல்.

ஹென்றீஸ் பகுதி ஆட்டோ ஓட்டுநர் யைச் சேர்ந்த 15 தோழர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் நலத் திட்ட உதவிகள்.

மாணவ, மாணவி யருக்கு இனிப்பு வழங்கு தல், இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.



தாராபுரம் சட்டமன்ற இடைதேர்தலை முன்னிட்டு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் தாராபுரம், மரக்கடை புதுப்பள்ளி ஜும்மா தொழுகையில், பிரச்சாரம் நடைபெற்றது. இப்பிரச்சாரத்தில் வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யா அவர்கள் இஸ்லாமிய மக்களிடையே தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டார். உடன் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான், உடுமலை சட்டமன்ற உறுப்பினர் ஜெயக்குமார், தாராபுரம் நகர கழகச் செயலாளர் முருகானந்தம், கமலக்கண்ணன், முனவர் ஜான், துபாய் கே.அன்வர் அலி, ஆஷிக் பாஷா, நிசார் அகமது, சையத் ஷாவலி, அல்தாப் உசேன், ஷாஜஹான், பரக்கத் அலி, முகமது ஜுபைர், ஜம்சித் அகமது, கிதியான் சுரேஷ், ஜாகிர் பாஷா, ஹாஜி மூஸா ஹக்கீம் சேட், தென்காசி ஹக்கீம், பாஷா, பதி, அப்பாஸ், சித்திக் அலி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்று பொதுமக்களிடம் வாக்குகளை சேகரித்தனர்.